செய்தி வெளியீடு எண்:1012 நாள்:01.11.2021

செய்தி வெளியீடு

தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் 1974 –ஆம் ஆண்டு மீனவர்களின் மேம்பாட்டிற்காக துவக்கப்பட்டு செயல்பட்டுவருகிறது.

கடந்த 28.10.2021 அன்று, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தின் தலைவராக நாகப்பட்டினம் மாவட்டம் அக்கரைபேட்டை கிராமத்தை சேர்ந்த திரு. ந.கௌதமன், அவர்களை நியமித்து ஆணையிட்டதனைத் தொடர்ந்து (அரசாணை (நிலை) எண்.107 கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை (மீவ5) நாள்.28.10.2021) தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழக தலைவராக திரு. ந. கௌதமன், அவர்கள் இன்று (01.11.2021) பொறுப்பேற்றுக்கொண்டார்.

இந்நிகழ்வின்போது மீன்வளம் – மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், சுற்றுச்சூழல் – காலநிலை மாற்றத்துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் மாண்புமிகு திரு.சிவ.வீ.மெய்யநாதன், நாகப்பட்டிணம் சட்டமன்ற உறுப்பினர் திரு. ஆளூர் ஷா நவாஸ். அரசின் கூடுதல் தலைமைச் செயலாளர், கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை திரு. தெ. சு. ஜவஹர், இ.ஆ.ப., மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை ஆணையர்/ மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம், டாக்டர். கே. எஸ். பழனிசாமி, இ.ஆ.ப., ஆகியோர் உடனிருந்தனர்.

**மேலாண்மை இயக்குநர்**
**தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம்**

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை - 9